11.03.2026
OS. No.385/2023
**வா.சா.1 –** திரு.நெடுஞ்செழியன், த/பெ.திரு.கிருஷ்ணமூர்த்தி

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**

இந்த வழக்கில் கண்ட 1வது அயிட்டத்தில் கண்ட இரண்டு முதல் ஏழு வரையிலான சொத்துக்கள் சாகுபடி நிலங்களா என்றால் அதில் தோட்டம் மட்டும்தான் சாகுபடி நிலம் ஆகும். அந்த சொத்துக்களில் ஆறு சகோதரர்களுக்கும் சம பாகம் இருப்பதாக காட்டப்பட்டு இருக்கிறது என்றால் கிடையாது. 2001 ஆம் வருடம் ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் என் தகப்பனாருக்கு அந்த சொத்துக்களில் ஆறில் ஒரு பாகம் ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். ஆனால் என் தகப்பனார் வசம் ஆறில் நான்கு பாகம் தற்போது இருக்கிறது என்றால் என் தகப்பனார் மூத்த நபர் என்பதாலும் அனைவருக்கும் செலவளித்ததாலும் அவ்வாறு நான்கு பாகம் வைத்துக்கொண்டார். என் தகப்பனார் தன்னுடைய பாகம் தவிர தன்னுடைய மூன்று சகோதரர்களுக்கு உரிய பாகத்தை பணம் கொடுத்து வாங்கி இருக்கிறார் என்றும் அதன் காரணமாகவே அவருக்கு ஆறில் நான்கு பாகம் ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் என் அம்மாவின் நகைகளை விற்பனை செய்து அவ்வாறு வாங்கினார். என் அம்மாவின் நகைகளை விற்பனை செய்து தான் என் தகப்பனார் அவ்வாறு ஆறில் நான்கு பாகத்தை வாங்கினார் என்ற விபரத்தை நான் தாக்கல் செய்த வழக்குரையில் சொல்லவில்லை. என் அம்மாவின் நகைகளை விற்பனை செய்து வாங்கியதாக தற்போது வழக்குக்காக பொய்யாக

Adocasa

சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த சொத்துக்களில் ஆறில் இரண்டு பாகம் யாருக்கு ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் என் சித்தப்பா மகன் கார்த்திகேயன் என்பவருக்கு ஒதுக்கப்பட்டு இருக்கிறது. கார்த்திகேயன் மற்றொரு ஆறில் ஒரு பாகத்தை என் சித்தப்பா ஒருவரிடம் இருந்து கிரையம் வாங்கி இருக்கிறார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு எதுவும் தெரியாது என்றும் உண்மைக்கு மாறாக வழக்கை தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் இரண்டாவது இலக்க சொத்தில் இருந்து மூன்றாவது இலக்கச் சொத்து வரையிலான சொத்துக்கள் என் தகப்பனாரின் சுய சம்பாத்தியத்தை வைத்து வாங்கப்பட்டது என்றும், அதில் நான் உரிமை கோர இயலாது என்றும், அதை அவர் வாங்குவதற்கு எனது பங்களிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றும், சொத்துக்களை அவர் கிரயம் வாங்கிய காலத்தில் நான் அவருடன் சுமூகமான உறவிலும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. சுமூக உறவில் இருந்தேன். அல்லி என்பவர் தொடர்பாக வழக்குரையில் குறிப்பிட்டிருக்கக் கூடிய சங்கதிகள் அனைத்தும் அவதூறு உடையது என்றும் அபாண்டமானது என்றும் சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் அல்லி என்பவருக்கு எவ்வளவு நிலத்தில் எவ்வளவு பங்கு விற்பனை செய்தார் என்றால் நாலே கால் சென்ட் நிலத்தை வைப்பாட்டி மகளுக்கு கொடுத்தார். அல்லி என்பவர் என் தகப்பனாரின் வைப்பாட்டி மகள் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, அது அவதூறானது என்றாலும் சரி அல்ல. அல்லி என்பவர் என் தகப்பனாரின் வைப்பாட்டி மகள் என்று கூறுவதற்கு ஆதரவாக என் தரப்பில் சாட்சிகள் விசாரிக்க தயாராக

இருக்கிறேனா என்றால் விசாரிப்பேன். அல்லியின் தகப்பனார் பெயர் பரமசிவம் ஆகும். அவர் இறந்து விட்டார். அவர் இறந்து தற்போதையிலிருந்து சுமார் 4, 5 வருடங்கள் இருக்கும். 2018 ஆம் வருடம் வாக்கில் எனக்கு கால்களில் பிரச்சனை ஏற்பட்டு மிகுந்த சிரமப்பட்டேன் என்றால் சரிதான். அந்த காலத்தில் என்னுடைய கால்களை அகற்ற வேண்டும் என்று கூறினார்கள் என்றால் இல்லை. அப்போது என்னை என் அப்பா அம்மா இருவரும் கண்ணனூர் கிராமத்திற்கு அழைத்து வந்து சிகிச்சை அளித்தார்கள் என்றால் சரிதான். அப்போது எனது சிகிச்சைக்காக ரூபாய் ஐந்து முதல் பத்து லட்சம் வரை செலவானது என்றால் இல்லை. அது போக எனக்கு செலவுக்கு பணம் வேண்டும் என்று என் அப்பாவிடம் ரூபாய் 15 லட்சம் ரொக்கம் பெற்றுக் கொண்டேன் என்று சொன்னால் இல்லை. எனது மகன் பெயர் சந்திரன் ஆகும். நான் கண்ணனூரில் இருந்த காலத்தில் எனது மகன் தாத்தா பாட்டி வீட்டிற்கு வந்து சென்றான். என் மீது என் தகப்பனார் 2021ல் ஜம்புநாதபுரம் காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்திருந்தார். அது தொடர்பாக காவல் நிலையத்தில் விசாரணை நடைபெற்றதா என்றால் காவல் நிலையத்தில் மிரட்டினார்கள். காவல் நிலையத்தில் நடைபெற்ற விசாரணையின் போது நான் ரூபாய் ஐந்து லட்சம் என் அப்பாவிற்கு கொடுப்பதற்கு சம்மதித்து எழுதிக் கொடுத்தேன் என்று சொன்னால் மிரட்டி வாங்கினார்கள். நான் கூறுவது போல் அவர்கள் என்னை மிரட்டவில்லை என்றும், நான் தான் உண்மை நிலையை அனுசரித்து எழுதிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது சமீபத்தில் 12 பவுன் தங்க நகை வங்கியில் அடமானம் வைக்கப்பட்டிருந்ததை நான் பெற்று

VerdictumIn

சென்று விட்டேனா என்றால் அது என்னுடைய நகை என்பதால் வாங்கிச் சென்றேன். அந்த 12 பவுன் நகை என்னிடம் இருந்ததா அல்லது என் அம்மாவிடம் இருந்ததா என்றால் வைபாட்டியிடம் இருந்ததை நான் என் அப்பாவிடம் இருந்து வாங்கிக் கொண்டு சென்றேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் வயோதிகத்தையும், இயலாமையையும் பயன்படுத்தி நான்தான் அந்த நகைகளை அபகரித்து சென்று விட்டேன் என்றால் சரியல்ல. லெட்சுமி பிரபா என்பவர் என் சித்தப்பா மகள் ஆவார். அந்த லட்சுமி பிரபாவுக்கு என் தகப்பனார் ஒரு மனையை விற்பனை செய்தார் என்றால் சரிதான். அந்த மனையை விற்பனை செய்து அல்லி என்பவரிடம் இருந்து மறு கிரையம் பெற்ற இடத்தில் சகல வசதிகளுடன் என் அப்பா ஒரு வீடு கட்டினார் என்றால் என் பணத்தையும் சேர்த்து வைத்து தான் கட்டினார். நான் என் அப்பாவிடம் பணம் கொடுத்ததற்கு ஆதாரம் இருக்கிறதா என்றால் எல்லா பணத்தையும் அவரிடம் கொடுத்து வைப்பேன். நான் வழக்கிற்காக பொய்யாகச் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2018 ஆம் வருடம் என்னை ஈரோட்டில் இருந்து சிகிச்சைக்காக அழைத்து வந்த பிறகு தான் அந்த வீடு கட்டப்பட்டது என்றால் சரிதான். அந்த வீட்டை நான் குடியிருப்பதற்கு ஏதுவாக என் அப்பா கட்டினார் என்று சொன்னால் விற்பனை செய்வதற்கு ஏதுவாகத்தான் கட்டினார். நானும் எனது மனைவியும் எனது மகனும் சேர்ந்து என் தகப்பனாரை விற்பனை செய்து பணத்தை எடுத்துச் செல்ல வேண்டும் என்று வற்புறுத்தினோம் என்றால் சரியல்ல. என் தகப்பனாருக்கு நானும் என் குடும்பத்தினரும் பல வகைகளில் இடையூறு செய்து வந்தோம் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி பெயரில்

வாங்கப்பட்ட சொத்துக்கள் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்று விளம்புகை பரிகாரம் கேட்பதற்கு எனக்கு எந்தவித உரிமையும், முகாந்திரமும் கிடையாது என்றால் சரியல்ல. 1வது அயிட்டத்தில் கண்ட 2 முதல் 7 சொத்துக்களில் எனக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலைக்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

WebCopy